செ.வெ.எண்:-22 நாள்:-12.01.2017

# அரியலூர் மாவட்டத்தில் பொங்கல் விழா மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் கொண்டாடப்பட்டது.

அரியலூர் மாவட்டம், அரியலூர் நீதிமன்ற வளாகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ,ப.,** அவர்கள் தலைமையில், அரியலூர் மாவட்ட அமர்வு நீதிபதி **திரு.A.K.A.ரஹ்மான்** அவர்கள் முன்னிலையில் இன்று (12.01.2017) தமிழர்களின் திருநாளான **"பொங்கல் விழா"** சிறப்பாக கொண்டாடப்பட்டது.

இவ்விழாவில், தமிழர்களின் பாரம்பரிய விழாவான பொங்கல் திருநாளை முன்னிட்டு புதுப்பானையில் கோலமிட்டு, மஞ்சள், செங்கரும்பு வைத்து சக்கரை பொங்கல் பொங்கிய பொழுது **"பொங்கலோ பொங்கல்"** என்று பொங்கல் வைத்து, பொதுமக்கள் மற்றும் அலுவலர்கள் அனைவருக்கும் சக்கரை பொங்கல் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட மகிளா நீதிமன்ற நீதிபதி திரு.லிங்கேஸ்வரன், தலைமை குற்றவியல் நீதிபதி திரு.ரவி, சார்பு நீதிபதி திரு.நாகராஜன், மாவட்ட உரிமையியல் நீதிபதி திரு.சீனிவாசன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.அணில்குமார் கிரி, இ.கா.ப., அரியலூர் மற்றும் ஜெயங்கொண்டம் நீதிமன்ற நீதிபதிகள், அனைத்து வழக்கறிஞர்கள், அரியலூர் நகராட்சி ஆணையர் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.